## அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை எதிர்க்கும்

# கிருஷ்ணசாமியின் வீட்டை முற்றுகையிடுவோம்

## ஆதிதமிழர் பேரவை எச்சரிக்கை

நெல்லை, ஆக. 19: ஆதிதமிழர் பேரவை பொதுச் செயலாளர் நாகராசன் நெல்லையில் நிருபர்களிடம் கூறியதாவது: நாளை 20ம் தேதி ஒண்டிவீரனின் நினைவு நாளை முன்னிட்டு நெல்கட்டும் செவலில் நடக்கும் நிகழ்ச்சியில் ஆதி தமிழர் நிறுவன தலைவர் அதியமான் தலைமையில் அன்று மதியம் 12 மணிக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடக்கிறது.

அன்று மாலை 6 மணிக்கு பாளை. ஜவகர் திடலில் மண்ணுரிமை மாநாடு நடக்கிறது. இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன், இந்திய கம்யூ. தேசிய செயலாளர் ராஜா, மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் ராமகிருஷ்ணன், ஜவாஹிருல்லா எம்எல்ஏ, அகில இந்திய கிறிஸ்தவ குழு தலைவர் குமார்சுவாமி உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டதன் மூலம் மருத்துவம், இன்ஜினியரிங் கல்லூரிகளில் கூடுதல் இடங்கள் கிடைக்கிறது. அரசு பணிகளில் கூடுதல் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அருந்ததியர்களில் 8 உட் பிரிவுகள் உள்ளன. இதையெல்லாம் கருதியே உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் செய்வதற்கு வேறு வழியில்லாது மலிவான அரசியலுக்காக உள் ஒதுக்கீடு பிரச்னையை கிருஷ்ணசாமி கையில் எடுத்துள்ளார். அருந்ததியர்களுக்கான உள் ஒதுக்கீட்டை எதிர்த்து வரும் கிருஷ்ணசாமியை கண்டித்து மாநாடு முடிந்தவுடன் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம். அவரது வீட்டையும் முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம். இவ்வாறு தெரிவித்தனர். மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன், மாநகர செயலாளர் வேலாயுதம், மாநில துணை பொதுச் செயலாளர் வீரமுருகன், பாரத்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



## தேடுதல் அறிவிப்பு

# ஒண்டிவீரன் நினைவு நாள் அனுஷ்டிப்பு
# பாளை.யில் நாளை மண்ணுரிமை மாநாடு

திருநெல்வேலி, ஆக.19—

ஒண்டிவீரன் நினைவுநாளை முன்னிட்டு ஆதித்தமிழர் பேரவை சார்பில் நாளை (20ம் தேதி) பாளை.யில் மண்ணுரிமை மாநாடு நடக்கிறது.

இதுகுறித்து ஆதித்தமிழர் பேரவை பொது செயலாளர் நாகராஜன் கூறியதாவது:

ஆதித்தமிழர் பேரவை சார்பில் 20ம் தேதி ஒண்டிவீரன் நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது. அன்றைய தினம் சங்கரன்கோவில் அருகேயுள்ள நெற்கட்டான் செவலில் பேரவையின் நிறுவன தலைவர் அதியமான் தலைமையில் வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடக்கிறது. இந்நிகழ்ச்சிக்கு நெல்லை மாவட்டம் முழுவதிலும் இருந்து திரளானோர் பங்கேற்கின்றனர். தொடர்ந்து மாலை 4 மணிக்கு பாளை.ஜவஹர் திடலில் ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் மண்ணுரிமை மாநாடு நடக்கிறது.

மாநாட்டிற்கு ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான் தலைமை வகிக்கிறார். சிறப்பு விருந்தினராக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், இந்திய கம்யூ.கட்சி தேசிய செயலாளர் ராஜா, மா.கம்யூ. மாநில செயலாளர் ராமகிருஷ்ணன், மனிதநேய மக்கள் கட்சி மூத்த தலைவர் ஜவாஹிருல்லா, இந்திய [illegible] குழு தலைவர் குமாரசாமி மற்றும் பல்வேறு கட்சிகளை சேர்ந்த தலைவர்கள், நிர்வாகிகள் கலந்துகொள்கின்றனர்.

தற்போது புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி உள்இடஒதுக்கீட்டிற்கு எதிராக கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கை அவர் வாபஸ் பெறவேண்டும். இல்லையென்றால் வரும் 20ம் தேதிக்கு பிறகு வழக்கை வாபஸ் பெறும்வரை கோவையில் உள்ள கிருஷ்ணசாமியின் வீட்டை தொடர்ந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபடுவோம். இவ்வாறு நாகராஜன் கூறினார்.

மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன், மாநகர செயலாளர் வேலாயுதம் உடனிருந்தனர்.

# தலித் அரசியலில்

ஜவஹர்

தமிழக அரசியல் களத்தில், சமீபநாட்களாக குறிப்பிடத்தக்க சக்தியாக உருவாகி வருகிறது, ஆதித்தமிழர் பேரவை. இந்த அமைப்பின் சார்பில் வருடம் தோறும், ஆகஸ்ட் 20 ஆம் தேதி மாமன்னர் ஒண்டிவீரனின் நினைவு தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த வருடம் ஒண்டிவீரனின் நினைவு தினத்தை, நெல்லையில் ஆதித்தமிழர்களின் தன்னுரிமைக்கான மண்ணுரிமை மாநாடாக நடத்தியதுடன் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனுடன் கைகோத்திருப்பது தமிழக அரசியல் களத்தில், குறிப்பாக தலித் அரசியல் களத்தில் ஒரு புதிய கூட்டணியை உருவாக்கியுள்ளது.

காலையில் நெற்கட்டான் செவலில், ஒண்டிவீரனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய ஆதித்தமிழர் பேரவையினர், மாலையில் பாளை ஜவகர் திடலில் ஆதித்தமிழர்களின் தன்னுரிமைக்கான மண்ணுரிமை மாநாட்டினை நடத்தினர்.



சி.டி. வெளியிடும் ஜி.ராமகிருஷ்ணன்...

இம்மாநாட்டில், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகளின் கட்சியின் தலைவர் திருமாவளவன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட், மனித நேய மக்கள் கட்சியின் மாவட்ட நிர்வாகிகளும் கலந்துக் கொண்டு உரையாற்றினர்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் பேசுகையில், “ஒண்டிவீரனின் மறைக்கப்பட்ட வரலாற்றை வெளியே கொண்டு வந்ததில், ஆதித்தமிழர் பேரவைக்கு முக்கிய பங்குண்டு. தீண்டாமைக்கு எதிராக போராடுகிற உங்களோடு சி.பி.எம். என்றும் துணைநிற்கும். 1986-ல் அருந்ததியர்க்கு உள் ஒதுக்கீடு வேண்டுமென அதியமான் குரல் கொடுத்தபோது, அவரோடு துணை நின்றது சி.பி.எம். பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் எப்படி மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதோ, அது போலத்தான், தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் 3% இட ஒதுக்கீடு அருந்ததியருக்கு வழங்கப்பட்டது. இந்த இட ஒதுக்கீட்டை பாதுகாக்க நீலக்கொடியுடன், செங்கொடியும் துணைநிற்கும்” என்றார்.

விடுதலை சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன் பேசுகையில்,

“60 ஆண்டுகாலமாக தலித் அரசியல் உள்ளது. ஆனால் அவர்களை அரசியல் ரீதியாக அங்கீகரிக்க எவரும் முன்வரவில்லை. காரணம் தாழ்த்தப்பட்டோரின் ஓட்டுக்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கிவிடலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். பிற அரசியல் கட்சிகளுக்கு கொடிகட்டுவதற்கும், போஸ்டர் ஒட்டவும், பிணம் தூக்கவும், பிணம் எரிக்கவும், மலம் அள்ளவும் என்று நம்மவர்களின் வாழ்க்கை விரயமாகிறது. அடி வாங்கவா அரசியலுக்கு வந்தோம்?

நம்மைப் பற்றி உண்மையிலேயே கவலைப்பட்டவர் அம்பேத்கர். அதனால்தான் அவர் காங்கிரஸ் கட்சியில் இணையவில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் பலர் காங்கிரஸில் இணைந்து பதவிகளைப் பெற்ற காலத்தில், அம்பேத்கர் காங்கிரஸில் இணையவில்லை. இணைந்திருந்தால் அவர் மத்திய மந்திரியாகியிருப்பார். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்தினை மட்டும் மனதில் கொண்டு செயல்பட்டார் அந்த உன்னதத் தலைவர் அம்பேத்கர்.

இங்கு வழங்கப்பட்ட வாள், வன்முறையின் குறியீடு அல்ல. அது அதிகாரத்தின் குறியீடு. இந்த வாளை கொடுத்தீர்களே... அது வீதியில் இறங்கிப்போய் சண்டை போடவா? இல்லை. கோட்டையில் போய் அதிகாரத்தை கைப்பற்ற.

நடைமுறையில் இருக்கிற ஜனநாயகத்தில் மக்களைத் திரட்டி, தேர்தல் முறையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது ஒரு முறை. இன்னொரு முறை,



திருநெல்வேலியில் ஒண்டிவீரன் பிறந்தநாளையொட்டி, ஆதித்தமிழர் பேரவை நடத்திய மண்ணுரிமை மாநாட்டில் டாக்டர் அம்பேத்கரின் சாதி ஒழிப்பு குறித்த நூலை, குறுந்தகடு வடிவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் வெளியிட்டார். உடன் ஆதித்தமிழர் பேரவை தலைவர் இரா.அதியமான் உள்ளிட்டோர்.

# தீண்டாமைத் தீயை ஒழிக்க ஒன்றுபட்ட இயக்கம்

## மண்ணுரிமை மாநாட்டில் ஜி.ராமகிருஷ்ணன் அழைப்பு

திருநெல்வேலி, ஆக.21 -

தீண்டாமைத் தீயை ஒழிக்க ஒன்றுபட்ட இயக்கம் அவசியம் என நெல்லையில் ஆதித்தமிழர் பேரவை சார்பில் நடைபெற்ற மண்ணுரிமை மாநாட்டில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜிராமகிருஷ்ணன் பேசினார்.

பாளை ஜவகர் திடலில் ஆதித்தமிழர் பேரவை சார்பில் மண்ணுரிமை மாநில மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் தலைமை தாங்கினார்.

ஆதித்தமிழர் பேரவை நெல்லை மாவட்டச்செயலாளர் கலைகண்ணன் வரவேற்று பேசினார். மாநாட்டு அரங்கத்தை மாநில பொதுசெயலாளர் நாகராஜன் திறந்து வைத்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிறுவனர் தொல். திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசியச் செயலாளர் து.ராஜா, அகில இந்திய கிறிஸ்தவ குழு தமிழக தலைவர் குமாரசுவாமி ஆகியோர் பேசினர்.

நெல்லைச் சீமை வீரபாண்டிய கட்டபொம்மன், மகாகவி பாரதியார், வ.உ.சி, பூலித்தேவன், சுந்தரலிங்கம், ஒண்டி வீரன் ஆகியோரை ஈன்ற பெருமை கொண்டது.

சில வரலாறுகள் மறைக்கப்பட்டாலும், ஒண்டிவீரன் வரலாற்றை வெளியே கொண்டு வர ஆதித்தமிழர் பேரவை பாடுபட்டுள்ளது. அருந்ததியினருக்கு வழங்கப்பட்டுள்ள 3 சதவீத இட ஒதுக்கீட்டை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து உள்ஒதுக்கீடு தொடர பாடுபடும். நாடு சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகள் கழித்தும் தமிழகத்தில் ஆட்சிகள் மாறி, மாறி தொடர்ந்த பின்னரும் தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதா?

இந்த நூற்றாண்டில் சாதி மாறி காதல் திருமணம் புரிவோரை கொலை செய்யும் சாதிவெறியர்கள் அதை கவுரவக் கொலை என்று அழைக்கிறார்கள். இத்தகைய கொலைகளை தடுக்க சட்டம் கொண்டு வரப்பட்டதா?

தீண்டாமை எண்ணும் தீயை ஒழிக்க

நாடு முழுவதும் தனியார்மயம், தாராளமயம் என மாறி வருகிறது. பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கினால் இட ஒதுக்கீடு பெற முடியாது. எனவே நவீனமயத்திற்கும் தாராளமயத்திற்கும் எதிராகபோராட வேண்டிய நிலையில் உள்ளோம்.

அருந்ததியினர் போராடிப் பெற்ற உரிமைகளை, சலுகைகளை பாதுகாக்கப் போராடும் உங்களோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி துணை நிற்கும். தீண்டாமைக்கு எதிராக போராடும் நீலக்கொடியோடு செங்கொடியும் துணைநிற்கும்.

இவ்வாறு ஜி.ராமகிருஷ்ணன் பேசினார். மாநாட்டில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் கே.ஜி.பாஸ்கரன், மாநிலக்குழு உறுப்பினர் ஆர்.கருமலையான், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் வீ.பழனி, முன்னாள் எம்.எல்.ஏ ஆர்.கிருஷ்ணன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் அம்பேத்கரின் சாதி

# ஒண்டி வீரன் நினைவிடத்தில் மரியாதை



திருநெல்வேலி ஆக 20-

சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை மாவட்டம் நெற்கட்டான் செவலில் உள்ள அவரது நினைவிடத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி இணைந்து மாலை அணிவித்து மரியாதைசெலுத்தியது.

ஆங்கிலேயரின் ஆட்சியை இந்தியாவில் இருந்து விரட்டிட தென்னகத்திலிருந்து முதல் குரல் கொடுத்த நெல்கட்டும் செவல் பாளையக்காரரான மன்னர் பூலித்தேவனின் படைத்தளபதிகளாக விளங்கியவர்கள் ஒண்டிவீரன், வெண்ணிக்காலாடியார். இவர்களில் தளபதி ஒண்டிவீரனுக்கு நெற்கட்டும்செவல் அருகேயுள்ள பச்சேரியில் நினைவு தூண் நிறுவப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக அவரது நினைவு நாளை முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் திங்கட்கிழமையன்று அவரது நினைவு நாளில்

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் கே.ஜி.பாஸ்கரன் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் பி.சம்பத் கலந்து கொண்டு மாலை அணிவித்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநில பொதுச் செயலாளர் சாமுவேல்ராஜ், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் பொ.ஜெயராஜ், தி.கணபதி, மாவட்ட குழு உறுப்பினர்கள் மருதையா, வேலுமயில், சங்கரன் கோவில் சிபிஎம் தாலுகா செயலாளர் முத்து பாண்டியன், வட்டார குழு உறுப்பினர்கள் பால்சாமி, கிருஷ்ணமூர்த்தி, கருப்பையா, பலவேசம், பாலசுப்பிரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டு நினைவு ஸ்தூபியில் மரியாதை செலுத்தினர்.

தீக்கதிர் - கோவை - 21-8-2012

# நெல்கட்டும்செவலில் ஒண்டிவீரன் நினைவு தினம்



வாசுதேவநல்லூர் அருகே நெல்கட்டும்செவலில் சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு தினத்தையொட்டி, திங்கள்கிழமை அவரது ஸ்தூபிக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார், சட்டப் பேரவை துணைத் தலைவர் பி. தனபாலன். உடன், அமைச்சர் பி. செந்தூர்பாண்டியன்.

**சிவகிரி, ஆக. 20:** திருநெல்வேலி மாவட்டம்,வாசுதேவநல்லூர் அருகேயுள்ள நெல்கட்டும்செவலில் சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு தினம் திங்கள் கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் தமிழக அரசு சார்பில் சட்டப் பேரவை துணைத் தலைவர், அமைச்சர் மற்றும் பல்வேறு கட்சி பிரமுகர்கள், அமைப்பினர் பங்கேற்று மரியாதை செலுத்தினர்.

வெள்ளையருக்கு எதிராக முதன் முதலில் குரல் கொடுத்த மன்னர் பூலித்தேவரின் படைத் தளபதியான ஒண்டிவீரனின் நினைவு தினம் ஒவ்வோர் ஆண்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

திங்கள்கிழமை இவரது நினைவு தினத்தையொட்டி, நெல்கட்டும்செவல் பச்சேரியில் உள்ள அவரது நினைவு ஸ்தூபிக்கு மாலை அணிவித்து நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்தார் பச்சேரி ஊர்த்தலைவர் சிவஞானம்.

காலை 11.15 மணியளவில் தமிழக அரசு சார்பில் சட்டப் பேரவை துணைத் தலைவர் பி. தனபாலன், அமைச்சர் பி. செந்தூர்பாண்டியன், எம்.எல்.ஏ.க்கள் துரையப்பா (வாசுதேவநல்லூர்), முத்துசெல்வி (சங்கரன் கோவில்), வாசுதேவநல்லூர் அதிமுக ஒன்றியச் செயலர் மூர்த்தி பாண்டியன், ஒன்றியத் தலைவர் தங்கமாரி துரைப்பாண்டியன், சிவகிரி கார்த்திகைச்செல்வன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து, ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் தலைவர் அதியமான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திருநெல்வேலி மாவட்டச் செயலர் கே.ஜி. பாஸ்கரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் பி. ஜெயராஜ், டி. கணபதி, மாவட்டக் குழு உறுப்பினர்கள் உ. முத்துப்பாண்டி, பி. வேலுமயில், வாசுதேவநல்லூர் வட்டாரக் குழு உறுப்பினர் எம். மருதையா, நெல்கட்டும்செவல் கிளைச் செயலர் பி. கணபதிசாமி, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநிலத் தலைவர் பி. சம்பத், மாநிலச் செயலர் கே. சாமுவேல்ராஜ், மாநிலக் குழு உறுப்பினர் ஜி. ஞானகுரு, விருதுநகர் மாவட்டக் குழு உறுப்பினர் எம். முத்துக்குமார், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சங்கரன்கோவில் வட்டாரச் செயலர் பி. கிருஷ்ண மூர்த்தி, எஸ். ராஜா, மாநில செயற்குழு உறுப்பினர் பி. பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் மாலை சுமார் 5 மணியளவில் தொண்டர்களுடன் வந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அனைத்து அருந்ததியர் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் எம்.பி. பெருமாள்(சேலம்), அருந்ததியர் பெண்கள் எழுச்சி இயக்கத்தைச் சேர்ந்த மரியசெல்வி (திருநெல்வேலி), அருந்ததியர் மகா சபை மரியதாஸ் (பாளையங்கோட்டை), திமுக சார்பில் வழக்குரைஞர் மதுரைவீரன் (திருநெல்வேலி), அருந்ததியர் மக்கள் கட்சித் தலைவர் வலசை ரவிச்சந்திரன் உள்ளிட்ட திரளானோர் அஞ்சலி செலுத்தினர். தென்காசி கோட்டாட்சியர் ராஜகிருபாகரன், சிவகிரி வட்டாட்சியர் தி. கஸ்தூரி ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## 'உள் இடஒதுக்கீடு நியாயமானது'

தொண்டர்களிடையே ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் தலைவர் அதியமான் பேசும்போது, அருந்ததியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 3 சதவீத உள் இடஒதுக்கீடு நியாயமானது; அதை அடைவதற்கு சட்டப்படி எல்லா வகையிலும் போராடத் தயார். பஞ்சமி நிலங்கள் உள்பட இழந்த அனைத்து நிலங்களையும் மீட்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாநிலத் தலைவரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினருமான பி. சம்பத் கூறுகையில், அருந்ததியருக்கு வழங்கப்பட்டுள்ள உள் இடஒதுக்கீடு நியாயமானதாகும். ஏனெனில், இச்சமுதாய மக்கள் இன்னும் அடித்தளத்தில்தான் உள்ளனர் என்றார்.



ஒண்டிவீரன் ஸ்தூபிக்கு தொண்டர்களுடன் மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்துகிறார் ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனர் தலைவர் அதியமான்.



ஒண்டிவீரன் நினைவு ஸ்தூபியில் மரியாதை செலுத்துகிறார் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்புக் குழு முன்னணியின் மாநிலத் தலைவர் பி. சம்பத்.

# ‘அருந்ததியர் உள் ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக மார்க்சிஸ்ட் போராடும்’

திருநெல்வேலி, ஆக. 20: அருந்ததியருக்கான 3 சதவிகித உள்ஒதுக்கீட்டை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து வாதிடும் என்று, அக் கட்சியின் மாநிலச் செயலர் ஜி. ராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாளையங்கோட்டை ஜவாஹர் திடலில் ஆதித்தமிழர் பேரவை சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற மண்ணுரிமை மாநாட்டில் அவர் பேசியதாவது: அருந்ததியினர் போராடி பெற்ற உரிமைகளை, சலுகைகளை இன்னுயிரைத் தந்து பாதுகாக்க வேண்டும்.

தற்போது அருந்ததியினருக்கு வழங்கப்பட்டுள்ள 3 சதவிகித உள் ஒதுக்கீட்டை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்துகொண்டு உள்ஒதுக்கீடு தொடர போராடும்.

நாடு சுதந்திரம் பெற்று 65 ஆண்டுகளைக் கடந்தும் தீண்டாமைக் கொடுமை ஒடுக்கப்பட்டுவிட்டதா? இந்த 21-ம் நூற்றாண்டில் சாதி மாறி காதலித்து திருமணம் செய்வோரை கொலை செய்யும் சாதிவெறிக் கொலைக்கு கௌரவக் கொலை என்று பெயரிட்டுள்ளனர். இத்தகைய கொலைகளைக் தடுக்க சட்டம் கொண்டு வர வேண்டும். தீண்டாமைக் கொடுமைகளை எதிர்க்க ஒன்றுபட்ட இயக்கம் வேண்டும்.



பாளையங்கோட்டையில் ஆதித் தமிழர் பேரவை சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற மண்ணுரிமை மாநாட்டில், அம்பேத்கர் எழுதிய ‘சாதி ஒழிப்பு’ எனும் நூலின் சி.டி. வடிவத்தை வெளியிடுகிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலர் ஜி.ராமகிருஷ்ணன். உடன், பேரவையின் நிறுவனர் தலைவர் இரா.அதியமான்.

பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கினால் இடஒதுக்கீட்டின் பயனை பெற முடியாது. எனவே நவீன, தாராளமயமான பொருளாதார கொள்கைளுக்கு எதிராகவும் போராட வேண்டும்.

250 ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயரை எதிர்த்து பூலித்தேவனும், ஒண்டிவீரனும் போர் தொடுத்ததுதான் முதல் சுதந்திர போராட்டமாகும். வரலாற்று ஆசிரியர்களை இதை கருத்தில்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**தீர்மானங்கள்:** மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தலித்துகள் மீதான வன்கொடுமை வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும்.

ஆதித் தமிழர்களுக்கு குடியிருக்க 5 சென்ட் மனையிடமும், வேளாண்மை செய்ய 5 ஏக்கர் விளைநிலமும் வழங்க வேண்டும். சாதி மறுப்பு காதல் திருமணங்களை ஊக்குவிக்கும் வகையில் அரசே பிரசாரத்தில் ஈடுபட வேண்டும். புதிதாக உருவாக்கப்படும் ரியல் எஸ்டேட்டுகளில் 30 சதவிகித மனைகள் தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்டால்தான் உள்ளாட்சி மன்றங்களின் மனை அங்கீகாரம் வழங்கப்படும் என்ற வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ள வேண்டும்.

அம்பேத்கர் மற்றும் பெரியாரின் சாதி ஒழிப்புப் போராட் வரலாற்றை பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். ஒண்டிவீரன் நினைவு நாளை ஆண்டுதோறும் அரசு விழாவாக நடத்த வேண்டும். கூடங்குளம் அணுஉலையில் மின்னுற்பத்தி செய்யும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் உள்ள இடஒதுக்கீட்டுடன் தனியார் துறை வேலைவாய்ப்புகளிலும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும். தமிழீழ மக்களின் விருப்பத்தை அறிந்து நிறைவேற்ற ஐ.நா. அவை பொது வாக்கெடுப்பு ஒன்றை விரைந்து நடத்த வேண்டும்.

தமிழகத்தில் முழு மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் தலைவர் இரா. அதியமான், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், அகில இந்திய கிறிஸ்தவ குழு தமிழக தலைவர் குமார்சுவாமி உள்ளிட்டோர் உரையாற்றினர். பேரவை பொதுச்செயலர் ஆ. நாகராசன் மாநாட்டை தொடங்கி வைத்தார்.

அம்பேத்கரின் சாதி ஒழிப்பு குறித்த புத்தகம் குறுந்தகடு வடிவில் மாநாட்டில் வெளியிடப்பட்டது. இதை பேரவையின் துணை பொதுச்செயலர் க. கண்ணன் அறிமுகம் செய்துவைத்தார். பேரவையின் நிதிச்செயலர் ப. பெருமாவளவன் மாநாட்டு கொடியேற்றினார். திருநெல்வேலி மாவட்டச் செயலர் கு.கி. கலைக்கண்ணன் வரவேற்றார். மாவட்டத் தலைவர் க.ந. சுந்தர்ராசு நன்றி கூறினார்.

நெல்லை / மாலைமுரசு - 21-8-2012



கூட்டத்தில் திருமாவளவன் பேசிய போது எடுத்த படம்.

### ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும்

# அரசியல் சக்தியாக தலித் மக்கள் விளங்க வேண்டும்

## ஆதிதமிழர் பேரவை மாநாட்டில் திருமாவளவன் பேச்சு

நெல்லை, ஆக. 21–

ஒண்டிவீரன் நினைவு நாளையொட்டி ஆதி தமிழர் பேரவை சார்பில் பாளை மார்க்கெட் திடலில் மண்ணுரிமை மாநாடு நடைபெற்றது. பொதுச் செயலாளர் நாகராஜன் மாநாட்டை தொடங்கி வைத்தார். மாவட்ட செய லாளர் கலைக்கண்ணன் வரவேற்றார். நிதிசெயலாளர் பெருமாவளவன் மாநாட்டு கொடியை ஏற்றினார்.

மாநாட்டில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் ராமகிருஷ்ணன், ஆதிதமிழர் பேரவை தலைவர் அதியமான் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மாநாட்டில் தொல். திருமாவளவன் பேசியதாவது:–

விடுதலை சிறுத்தைகள் கட்சி கடந்த 15 ஆண்டுகளாக மண்ணுரிமைமீட்பு நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறது. கருணாநிதி முதல்– அமைச்சராக இருந்த போது நெல்லைக்கு அழைத்து வந்து மண்ணுரிமை மாநாடு நடத்தினோம்.

அந்த மாநாட்டில் அருந்ததியர்க்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினோம். அவர் 3 சதவீதம் உள் இடஒதுக்கீடு வழங்கி சட்டமாக்கினார்.

தலித் மக்கள் சிதறி கிடந்தால் நம்மை யாரும் சீண்ட மாட்டார்கள். போராடினால் தான் வெற்றி கிடைக்கும். அதிகாரத்தின் அடையாளமாக தலித் மக்கள் இருக்க வேண்டும் என்று அம்பேத்கார் கருதினார். எனவே நாம் அரசியல் சக்தியாக திரள வேண்டும்.

ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக தலித் மக்கள் விளங்க வேண்டும். தி.மு.க., அ.தி.மு.க. எந்த கட்சி ஆட்சி நடந்தாலும் தலித் மக்களுக்கு எதிரான செயல்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

மாநாட்டில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் ராமகிருஷ்ணன் பேசுகையில், அருந்ததியர்க்கு வழங்கப்பட்டுள்ள உள் ஒதுக்கீட்டை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியும் இணைந்து கொண்டு உள் ஒதுக்கீடு தொடர போராடும் என்றார்.

மாநாட்டில் அகில இந்திய கிறிஸ்தவ குழு மாநில தலைவர் குமாரசாமி, இந்திய கம்யூனிஸ்டு மாவட்ட செயலாளர் சண்முகவேலு, மனித நேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் மைதீன் பாருக் மற்றும் ஆதிதமிழர் பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கொலை செய்த பெண் உடலுக்கு

# ஆள்உயர மாலை வாங்கி சென்ற கொலையாளி

## போலீஸ் விசாரணையில்

என் அண்ணனின் மாமியாரான சாந்தாமணி வீட்டுக்கு அடிக்கடி செல்வேன். கொலை செய்ததற்கு ஒரு நாள் முன்பு சாந்தாமணி வீட்டுக்கு சென்றேன். அப்போது அவரது கணவர் வெளியூர் செல்வதாக கூறினார்.

மாலை

இதைத் தொடர்ந்து மறுநாள் வந்து சாந்தா

தினகரன் 15
நெல்லை 21 ஆகஸ்ட் 2012

## ஒண்டிவீரன் நினைவு நாளை

# அரசு விழாவாக அறிவிக்க வேண்டும்

### மண்ணுரிமை மாநாட்டில் வலியுறுத்தல்




ஒண்டிவீரன் நினைவுநாளையொட்டி ஆதித்தமிழர் பேரவை சார்பில் பாளை மார்க்கெட் திடலில் நடந்த மண்ணுரிமை மாட்டில் திருமாவளவன் பேசினார்.

நெல்லை, ஆக. 21: மாமன்னர் ஒண்டி வீரன் நினைவு நாளையொட்டி ஆதித்தமிழர் பேரவை சார்பில் நெல்லையில் மண்ணுரிமை மாநாடு நேற்று நடந்தது. மாநாட்டுக்கு ஆதித்தமிழர் பேரவை நிறுவன தலைவர் அதியமான் தலைமை வகித்து பேசுகையில், 'ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர்களிடத்தில் ஒற்றுமை உள்ளது. ஆனால் அந்த மக்களிடத்தில் வேற்றுமை காணப்படுகிறது. ஆதித தமிழர் பேரவை அரசியலில் ஈடுபடும் முடிவை எடுத்துள்ளது' என்றார்.

மாவட்ட நிர்வாகிகள் மனோகர், சண்முகவேல், கோவிந்தராஜ், சங்கர், திலிபன், ஈஸ்வரன், சுந்தர்ராஜ், செல்வம், கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொது செயலாளர் நாகராசன் மாநாட்டை திறந்து வைத்தார். மாநாட்டு கொடியை நிதிச்செயலர் பெருமாவளவன் ஏற்றி வைத்தார். மாவட்ட செயலர் கலைக்கண்ணன் வரவேற்றார்.

மாநாட்டில், அனைத்து மாவட்டங்களிலும் வன்கொடுமை தடுப்பு நீதி மன்றங்கள் அமைக்க வேண்டும். ஒண்டிவீரன் நினைவு நாளை அரசு விழாவாக அறிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

## 2ம் நிலை காவலர் பணிக்கான




பாளையங்கோட்டையில் நடந்த ஆதித்தமிழர் பேரவை மாநாட்டில் தொல்.திருமாவளவன் எம்.பி. பேசியபோது எடுத்தபடம். ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான் உள்ளிட்டோர் அருகில் உள்ளனர்.

**பாளையங்கோட்டையில் ஆதித்தமிழர் பேரவை மாநாடு**

# ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக தலித் மக்கள் விளக்க வேண்டும்

## தொல்.திருமாவளவன் பேச்சு

நெல்லை, ஆக.21–
ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக தலித் மக்கள் விளங்க வேண்டும் என்று பாளையங்கோட்டையில் நடந்த ஆதித்தமிழர் பேரவை மாநாட்டில் தொல்.திருமாவளவன் பேசினார்.

### மண்ணுரிமை மாநாடு

ஆதித்தமிழர் பேரவை சார்பில் பாளையங்கோட்டை மார்க்கெட் திடலில் மண்ணுரிமை மாநாடு நேற்று இரவு நடைபெற்றது. ஆதித்தமிழர் பேரவை நிறுவன தலைவர் இரா.அதியமான் தலைமை தாங்கினார். நிதிச்செயலாளர் ப.பெருமாவளவன் மாநாட்டு கொடி ஏற்றினார். நெல்லை மாவட்ட செயலாளர் கு.கி.கலைக்கண்ணன் வரவேற்று பேசினார். பொதுச் செயலா

துக்கீடு வழங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினோம். அதை அவர் 3 சதவீதம் உள்இடஒதுக்கீடு வழங்கி சட்டமாக்கினார்.

பாளையங்கோட்டையில் ஒண்டிவீரனுக்கு மணிமண்டபம் தி.மு.க. ஆட்சியில் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. அந்த கட்டிட பணிகள் முடிவடையாமல் இருக்கிறது. அதை தி.மு.க. அரசு கொண்டு வந்ததாக கருதாமல், முதல் சுதந்திர போராட்ட வீரனுக்கான நினைவு இடமாக கருதி கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதாவை கேட்டுக் கொள்கிறேன்.

### தீர்மானிக்கும் சக்தி

தலித் மக்கள் சிதறிக்கிடந்தால் நம்மை யாரும் சீண்ட

இருப்பது கூட உண்மை என்று நாம் எப்படி நம்ப முடியும்?

இவ்வாறு தொல்.திருமாவளவன் பேசினார்.

### ஜி.ராமகிருஷ்ணன்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் பேசுகையில், ‘மாவீரன் ஒண்டிவீரனால் நெல்லை மாவட்டம் பெருமைபட்டு உள்ளது. வரலாற்றை மறைத்தாலும், மறைக்கப்பட்டாலும் அதை ஆதித்தமிழர் பேரவை வெளியே கொண்டு வந்து உள்ளது. புலித்தேவனும், ஒண்டிவீரனும் நடத்திய போர்தான் முதல் இந்திய சுதந்திர போர் என்று வரலாற்றை திருத்தி எழுத வேண்டும். தலித் மக்களில் கடைநிலையில் உள்ள அருந்ததியர்களுக்கு 3 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தீர்மானம் நிறைவேற்றியது. உள் இடஒதுக்கீட்டை

பேரவை நிறுவன தலைவர் இரா.அதியமான் தலைமை தாங்கினார். நிதிச்செயலாளர் ப.பெருமாவளவன் மாநாட்டு கொடி ஏற்றினார். நெல்லை மாவட்ட செயலாளர் கு. கி.கலைக்கண்ணன் வரவேற்று பேசினார். பொதுச் செயலாளர் ஆ.நாகராசன் மாநாட்டை தொடங்கி வைத்தார்.

மாநாட்டில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான் ஆகியோர் பேசினர்.

தொல்.திருமாவளவன் பேசுகையில் கூறியதாவது:-

### 3 சதவீத ஒதுக்கீடு

தமிழகத்தில் ஒண்டியாய் நின்று ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்த வீரன் ஒண்டிவீரன். விடுதலை சிறுத்தைகள் கட்சி 15 ஆண்டுகளாக மண்ணுரிமை மீட்பு நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறது. மண்ணுரிமை மாநாட்டுக்கு எதிரான ஒடுக்குமுறைதான் என்னை தேர்தல் அரசியலுக்கு இழுத்தது.

கருணாநிதி முதல்-அமைச்சராக இருந்த போது நெல்லைக்கு அழைத்து வந்து மண்ணுரிமை மாநாடு நடத்தினோம். அந்த மாநாட்டில் அருந்ததியர்களுக்கு இடஒ

... விரைந்து முடிக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதாவை கேட்டுக் கொள்கிறேன்.

### தீர்மானிக்கும் சக்தி

தலித் மக்கள் சிதறிக்கிடந்தால் நம்மை யாரும் சீண்ட மாட்டார்கள். போராடினால் தான் வெற்றி கிடைக்கும். சமூகத்திலும், அரசியலிலும் மற்றவர்களுக்காக நாம் பயன்படுத்தப்பட்டு வந்து உள்ளோம். அதிகாரத்தின் அடையாளமாக தலித் மக்கள் இருக்க வேண்டும் என்று அம்பேத்கார் கருதினார்.

எனவே நாம் அரசியல் சக்தியாக திரள வேண்டும். ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக தலித் மக்கள் விளங்க வேண்டும்.

ஜெயலலிதா முதல்-அமைச்சராக பொறுப்பு ஏற்ற உடன் ஆதிக்கசக்திகள் தலை விரித்து ஆடுகின்றன. தலித்துகளுக்கு எதிரான கொடுமைகள் அரங்கேறி வருகின்றன. அ.தி.மு.க., தி.மு.க. என எந்த கட்சி ஆட்சி நடந்தாலும் தலித் மக்களுக்கு எதிரான செயல்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பரமக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்துக்கு ஒரு சில கட்சிகள் கண்டனம் தெரிவித்த போதும் தி.மு.க. வாய் திறக்காமல் இருந்து விட்டது. அப்படி இருக்கும் போது ஈழப் படுகொலையை கண்டித்து

... என்று வரலாற்றை திருத்தி எழுத வேண்டும். தலித் மக்களில் கடைநிலையில் உள்ள அருந்ததியர்களுக்கு 3 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தீர்மானம் நிறைவேற்றியது. உள் இடஒதுக்கீட்டை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டு உள்ளது. ஆனால் உள் இடஒதுக்கீட்டை நிலை நிறுத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தோளோடு தோள் நிற்கும்' என்றார்.

### அதியமான்

மாநாட்டில் ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான் பேசுகையில், 'ஆதித்தமிழர் பேரவையும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் கொள்கை ரீதியாக ஒன்றிணைந்து செயல்பட்டு வருகிறது. தலித் மக்கள் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தியாவும், ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெற அரசியல் இயக்கமாக மாற வேண்டும் என்று திருமாவளவன் வலியுறுத்தி உள்ளார். ஆதித்தமிழர் பேரவை அரசியல் அரசியல் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி உள்ளோம்' என்றார்.

மாநாட்டில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், அகில இந்திய கிறிஸ்துவ குழு மாநில தலைவர் குமார்சுவாமி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் சண்முகவேலு, துணை செயலாளர் சேவியர், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் மைதீன்பாருக் உள்ளிட்டோர் பேசினர்.

### அஞ்சலி

முன்னதாக நெற்கட்டான் செவல் கிராமத்தில் உள்ள ஒண்டிவீரன் நினைவிடத்தில் தொல்.திருமாவளன், ஆதித்தமிழர் பேரவை தலைவர் அதியமான் மற்றும் நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

### நெல்லையப்பர் கோவிலில்

## சுவாமி சப்பரங்கள் வீதி உலா

நெல்லை, ஆக.21-

நெல்லையப்பர் கோவிலில் ஆவணி மூலத்திருவிழா கடந்த 17-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. நேற்று 4-வது நாள் திருவிழாவில் இரவு 8 மணிக்கு சுவாமியும், அம்பாளும் வெள்ளி ரிஷப வாகனத்திலும், விநாயகர் வெள்ளி மூஞ்சுறு வாகனத்திலும், சுப்பிரமணியர் மயில் வாகனத்திலும், சண்டிகேசுவரர் சப்பரத்திலும் டவுன் 4 ரதவீதிகளிலும் வீதி உலா வந்தனர். வருகிற 25-ந்தேதி இரவு 9 மணிக்கு கருவூர் சித்தர் நெல்லையப்பர் கோவிலில் இருந்து எழுந்தருளி மானூர் மானூர் அம்பலவாண சுவாமி கோவிலுக்கு செல்கிறார்.

அங்கு சுவாமி, அம்பாளுடன் சென்று 27-ந்தேதி காலை 5 மணிக்கு கருவூர் சித்தருக்கு சுவாமி காட்சி கொடுத்து சாபவிமோசனம் அளிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

### கல்லூரி மாணவர்கள் கொலை வழக்கில்

பல்வேறு கல்வி நிறுவனங்களை சேர்ந்த வரலாற்று பேராசிரியர்கள், அறிஞர்கள் பேசுகின்றனர்.

களுக்கும் பரவியது. இதனால் கூடுதல் தீய

இருக்கலாம் என கூறப்படுகிறது.




பாளை.யில் ஆதித்தமிழர் பேரவை சார்பில் மண்ணுரிமை மாநாடு நடந்தது. மாநாட்டில் நிறுவன தலைவர் அதியமான் பேசினார்.

# ஒண்டிவீரன் மணி மண்டப பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்

## ★ ஆதித்தமிழர் மாநாட்டில் வலியுறுத்தல்

திருநெல்வேலி, ஆக. 21-

ஒண்டிவீரன் மணி மண்டப பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என பாளை.யில் நடந்த ஆதித்தமிழர் மண்ணுரிமை மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

ஒண்டிவீரன் நினைவு நாளை முன்னிட்டு ஆதித்தமிழர் பேரவை சார்பில் பாளை மார்க்கெட் திடலில் மண்ணுரிமை மாநாடு நேற்று நடந்தது. நெல்லை மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன் வரவேற்றார். நிதி செயலாளர் பெருமாவளவன் மாநாட்டு கொடியை ஏற்றினார். ஆதித்தமிழர் பேரவை பொதுசெயலாளர் நாகராஜன் மாநாட்டை துவக்கி வைத்தார்.

மாநாட்டில் ஆதித்தமிழர் பேரவை நிறுவன தலைவர் அதியமான் பேசியதாவது:

ஆதித்தமிழர் பேரவை துவங்கிய பின்புதான் ஒண்டிவீரனின் வரலாறு வெளியே தெரிந்துள்ளது. அவரது வரலாற்றை ஆராய்ந்து நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போதும் கூட நமக்கு கல்வி, மதம் கூட மறுக்கப்படுகிறது. ஒடுக்கப்பட்டவர்களிலேயே நாம்தான் அனைத்து காரியங்களிலும் மிகவும் பின் தங்கியுள்ளோம். நமது சமுதாய இளைஞர்கள் மத்தியில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றத்தை கொண்டு அரசியல் பகிர்வு நோக்கி செல்ல வேண்டும். நாம் ஒன்று சேர்ந்தால் அரசியல் பகிர்வு கிடைக்கும். அப்போதுதான் எல்லோரையும் போல் முன்னேற முடியும்.

இவ்வாறு அதியமான் பேசினார்.

மாநாட்டில் திருமாளவன் பேசுகையில், ''திமுக ஆட்சியில் கொண்டுவந்த திட்டம் என நினைக்காமல் ஒண்டிவீரனுக்கு கட்டப்பட்டு வரும் மணிமண்டப பணிகளை விரைந்து கட்டி முடிக்க வேண்டும். ஒடுக்கப்பட்டவர்களின் உரிமையை மீட்க வேண்டும் என்றால் நாம் அரசியல் சக்தியாக பிறந்தாக வேண்டும். அப்போதுதான் நமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். திராவிட கட்சிகளிடம் பேரம் பேசும் நிலையில் தான் நாம் உள்ளோம்'' என்றார்.

மா. கம்யூ., மாநில செயலாளர் ராமகிருஷ்ணன் பேசுகையில், ''பல்வேறு தலைவர்களால் நெல்லை பெருமைப்பட்டுள்ளது என்பார்கள். ஒண்டிவீரனாலும் நெல்லை சீமை பெருமைப்பட்டுள்ளது. ஒண்டிவீரன் வரலாற்றை வெளிக்கொண்டுவர ஆதித்தமிழர் பேரவை எடுத்த முயற்சிகள் பாராட்டுக்குரியது. உங்களுடன் எப்போதும் மா.கம்யூ., உறுதியாக துணை நிற்கும். பல ஆண்டுகள் போராடி பெற்ற அருந்ததியர்களுக்கு 3 சதவீத உள் இடஒதுக்கீட்டுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதற்கு எதிராக மா.கம்யூ.,கட்சி போராட்டம் நடத்தும்'' என்றார்.

மாநாட்டில் அகில இந்திய கிறிஸ்தவ குழு குமார்சாமி, மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் பாரூக், மா.கம்யூ.,நிர்வாகி பழனி, சேவியர், இந்திய கம்யூ.,நிர்வாகி சண்முகவேல் மற்றும் ஆதிதமிழர் பேரவை நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நெல்லை மாவட்ட தலைவர் சுந்தர்ராசு நன்றி கூறினார். ஏற்பாடுகளை தமிழ்நாடு ஆதிதமிழர் பேரவை நிர்வாகிகள் செய்தனர்.

### தீர்மானங்கள்

ஆதித்தமிழர்களுக்கு குடியிருக்க 5 சென்ட் மனையிடமும், வேளாண்மை செய்ய 5 ஏக்கர் நிலமும் வழங்க வேண்டும். ஒண்டிவீரன் மணிமண்டப பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். ஒண்டிவீரன் நினைவு நாளை ஆண்டுதோறும் அரசு விழாவாக அறிவித்து அரசே முன்னின்று நடத்த வேண்டும். கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் உள்ள இட ஒதுக்கீட்டுடன் தனியார் துறை வேலைவாய்ப்புகளிலும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். தமிழக அரசு விரைவில் முழு மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்பன போன்ற பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காலங்களிலும், தொழுகை தாமதமாக நடந்தது.

# அருந்ததியினருக்கு 6 சதவீத உள்இட ஒதுக்கீடு

## ஆதித்தமிழர் பேரவை வலியுறுத்தல்

**புளியங்குடி, ஆக.21:** அருந்ததியினருக்கு 6 சதவீத உள்இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என ஆதித்தமிழர் பேரவை மாநில தலைவர் அதியமான் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக அவர் நெற்கட்டும்செவலில் நிருபர்களிடம் கூறியதாவது:

ஒண்டிவீரன் குறித்த வரலாற்று உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. அவர் மாமன்னர் என்பதற்கான சான்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. முன்னாள் முதல்வர் கருணாநிதி அருந்ததியின மக்களுக்காக 3 சதவீத உள்இட ஒதுக்கீடு வழங்கினார். அதனை எதிர்த்து புதிய தமிழகம் கட்சித்தலைவர் கிருஷ்ணசாமி மட்டுமல்ல வேறு யாராயினும் எங்கு சென்றாலும் பறிக்கமுடியாது. உச்சநீதிமன்ற தீர்ப்பே இறுதியானது.

வடமாநிலங்களில் அருந்ததியினருக்கு 12 சதவீத ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள நிலையில் தமிழகத்தில் 3 சதவீதம் என்பதை 6 சதவீதமாக அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதாரத்தை பேணி காக்கும் மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதை எதிர்ப்பவர்கள் மனசாட்சி இல்லாதவர்கள். இவ்வாறு அவர் கூறினார்.

1 கிராம்

போர் நடத்தி அதிகாரத்தை கைப்பற்றுவது. நம் மக்களிடம் நிலமில்லை. ஆயுதம் இல்லை. அதிகாரமும் இல்லை. எனவே மக்கள் அமைப்பாக, வலுவாக நாம் உருவாக்கப்பட வேண்டும்.

மனிதனின் மலத்தை மனிதனே அள்ளும் கொடுமை உலகத்தில் வேறு எங்கும் உண்டா? உணவை அள்ளுகிற கையால் மலத்தை அள்ளுகிற கொடுமை இந்தியாவில் மட்டுமே உண்டு. நமது ரயில்வே துறையில் 3 லட்சம் பணியாளர்கள் மலம் அள்ளுகிற பணியைச் செய்கிறார்கள். இதை எதிர்த்து நான் நாடாளுமன்றத்தில் பேசினேன். வெளிநடப்பு செய்தேன்.

தலித் அரசியல் என்பது என்ன? ஒடுக்கப்பட்ட மக்களுக்களுக்கு எதிரான அடக்குமுறையை எதிர்ப்பதுதான் தலித் அரசியல். ஈழ விடுதலை அரசியலும் தலித் அரசியலும் ஒன்றுதான்.

பா.ம.க. உள்ளிட்ட சில கட்சிகளுக்கு அள்ளித் தருகிற திராவிட இயக்கங்கள், நமக்கு சீட்டுகளை அள்ளித் தருவதில்லை. காரணம், நமக்கு பேரம் பேசுகிற வலிமை இல்லை. நாம் வெவ்வேறு பல்வேறு விஷயங்களை வலியுறுத்திப் போராட நமக்குள் ஒற்றுமை தேவை. நாம் ஒன்றுபட்ட அரசியல் சக்தியாக திகழ்வோம்" என்றார்.

ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமான் பேச்சில் தலித் அரசியலில் புதிய பரிமாணத்துக்கான பொறி தெரிந்தது.

"நாம் இன்று திருமாவளவனை அழைத்து வந்திருக்கிறோம். உள் ஒதுக்கீடு போன்ற பல விஷயங்களில் விடுதலை சிறுத்தைகள் முன்னமே தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே நாம் சற்று முன்னதாகவே திருமாவளவனுடன் இணைந்து செயலாற்றியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். விடுதலை சிறுத்தைகளும் நாமும் எங்கே வேறுபடுகிறோம் என்று சிந்தித்துப் பார்த்தேன். நாம் எங்கும் வேறுபடவில்லை. திருமாவளவனின் பல்வேறு கருத்துக்களை ஏற்றுக்கொண்டு ஆதித்தமிழர் பேரவையும் அரசியலுக்கு வரலாம் என்று நினைக்கிறேன்.

குரு பூஜை, மாமன்னர் என்று வார்த்தையை நாம் பயன்படுத்தக்கூடாது என்று ஆதிக்க சக்திகள் கூறுகின்றன. நாம் இம்மண்ணின் மைந்தர்கள்,




மாநாட்டு மேடையில் திருமா...

# புதிய பரிமாணம்?

அடையாளத்தோடு, சிதறுண்டு கிடக்கிறோம். அதனால் வளர முடியவில்லை. அம்பேத்கரின் சிலையை உடைத்த பிறகும் நாடு அமைதியாக இருக்கிறது. வேறு சமூகத் தலைவர்களின் சிலையை உடைத்தால் போலீஸ் விடுமா? ஈழப்படுகொலையைக் கண்டித்தவர்கள், பரமக்குடி படுகொலையைக் கண்டித்தார்களா? தி.மு.க., அ.தி.மு.க. இரு ஆட்சியிலும் போலீஸ் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகத்தான் உள்ளது.

கக்கூஸ் சுத்தப்படுத்துபவனால் கக்கூஸை ஏலம் எடுக்க முடிகிறதா? எனவே அரசு குத்தகை ஒதுக்கீடு செய்யும் விஷயங்களிலும் தலித்துகளுக்கு தனி ஒதுக்கீடு கேட்போம். ஒட்டு மொத்தமாக, வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் 19% நிதி தலித் வளர்ச்சிகளுக்கு ஒதுக்கப்படவேண்டும். இதுபோன்ற மன்னர்கள். நாம் ஒட்டுமொத்தமாக இணைவோம். இனி பிரிக்கும் வேலைகளுக்கு இடம் கிடையாது. அறிவாசான்களாக, ஒண்டிவீரன் மதுரைவீரன் வாரிசுகளாக வாழ்வோம்" என்றார்.

ஆதித்தமிழர்களுக்கு குடியிருக்க 5 சென்ட் நிலமும், 5 ஏக்கர் விளைநிலமும் வழங்க வேண்டுமென தமிழக அரசை கேட்டுக்கொள்வது உள்ளிட்ட 15 தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. அருந்ததியர்களுக்கான 3% இட ஒதுக்கீட்டினை எதிர்த்து டாக்டர் கிருஷ்ணசாமி வழக்கு தொடர்ந்துள்ள நிலையில், திருமாவளவனும், ஆதித்தமிழர் பேரவையின் அதியமானும் கைகோத்திருப்பது தலித் அரசியல் களத்தில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்துமா என்ற எதிர்பார்ப்பைக் கிளப்பிவிட்டிருக்கிறது! ■

**படங்கள்: பி.கல்யாண்குமார்**

போர் நடத்தி அதிகாரத்தை கைப்பற்றுவது. நம் மக்களிடம் நிலமில்லை. ஆயுதம் இல்லை. அதிகாரமும் இல்லை. எனவே மக்கள் அமைப்பாக, வலுவாக நாம் உருவாக்கப்பட வேண்டும்.

மனிதனின் மலத்தை மனிதனே அள்ளும் கொடுமை உலகத்தில் வேறு எங்கும் உண்டா? உணவை அள்ளுகிற கையால் மலத்தை அள்ளுகிற கொடுமை இந்தியாவில் மட்டுமே உண்டு. நமது ரயில்வே துறையில் 3 லட்சம் பணியாளர்கள் மலம் அள்ளுகிற பணியைச் செய்கிறார்கள். இதை எதிர்த்து நான் நாடாளுமன்றத்தில் பேசினேன். வெளிநடப்பு செய்தேன்.

தலித் அரசியல் என்பது என்ன? ஒடுக்கப்பட்ட மக்களுக்களுக்கு எதிரான அடக்குமுறையை எதிர்ப்பதுதான் தலித் அரசியல். ஈழ விடுதலை அரசியலும் தலித் அரசியலும் ஒன்றுதான்.

பா.ம.க. உள்ளிட்ட சில கட்சிகளுக்கு அள்ளித் தருகிற திராவிட இயக்கங்கள், நமக்கு சீட்டுகளை அள்ளித் தருவதில்லை. காரணம், நமக்கு பேரம் பேசுகிற வலிமை இல்லை. நாம் வெவ்வேறு பல்வேறு விஷயங்களை வலியுறுத்திப் போராட நமக்குள் ஒற்றுமை தேவை. நாம் ஒன்றுபட்ட அரசியல் சக்தியாக திகழ்வோம்” என்றார்.

ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் அதியமான் பேச்சில் தலித் அரசியலில் புதிய பரிமாணத்துக்கான பொறி தெரிந்தது.

“நாம் இன்று திருமாவளவனை அழைத்து வந்திருக்கிறோம். உள் ஒதுக்கீடு போன்ற பல விஷயங்களில் விடுதலை சிறுத்தைகள் முன்னமே தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். எனவே நாம் சற்று முன்னதாகவே திருமாவளவனுடன் இணைந்து செயலாற்றியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். விடுதலை சிறுத்தைகளும் நாமும் எங்கே வேறுபடுகிறோம் என்று சிந்தித்துப் பார்த்தேன். நாம் எங்கும் வேறுபடவில்லை. திருமாவளவனின் பல்வேறு கருத்துக்களை ஏற்றுக்கொண்டு ஆதித்தமிழர் பேரவையும் அரசியலுக்கு வரலாம் என்று நினைக்கிறேன்.

குரு பூஜை, மாமன்னர் என்று வார்த்தையை நாம் பயன்படுத்தக்கூடாது என்று ஆதிக்க சக்திகள் கூறுகின்றன. நாம் இம்மண்ணின் மைந்தர்கள்,


மாநாட்டு மேடையில் திருமா...


# புதிய பரிமாணம்?

அடையாளத்தோடு, சிதறுண்டு கிடக்கிறோம். அதனால் வளர முடியவில்லை. அம்பேத்கரின் சிலையை உடைத்த பிறகும் நாடு அமைதியாக இருக்கிறது. வேறு சமூகத் தலைவர்களின் சிலையை உடைத்தால் போலீஸ் விடுமா? ஈழப்படுகொலையைக் கண்டித்தவர்கள், பரமக்குடி படுகொலையைக் கண்டித்தார்களா? தி.மு.க., அ.தி.மு.க. இரு ஆட்சியிலும் போலீஸ் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகத்தான் உள்ளது.

கக்கூஸ் சுத்தப்படுத்துபவனால் கக்கூஸை ஏலம் எடுக்க முடிகிறதா? எனவே அரசு குத்தகை ஒதுக்கீடு செய்யும் விஷயங்களிலும் தலித்துகளுக்கு தனி ஒதுக்கீடு கேட்போம். ஒட்டு மொத்தமாக, வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் 19% நிதி தலித் வளர்ச்சிகளுக்கு ஒதுக்கப்படவேண்டும். இதுபோன்ற மன்னர்கள். நாம் ஒட்டுமொத்தமாக இணைவோம். இனி பிரிக்கும் வேலைகளுக்கு இடம் கிடையாது. அறிவாசான்களாக, ஒண்டிவீரன் மதுரைவீரன் வாரிசுகளாக வாழ்வோம்” என்றார்.

ஆதித்தமிழர்களுக்கு குடியிருக்க 5 சென்ட் நிலமும், 5 ஏக்கர் விளைநிலமும் வழங்க வேண்டுமென தமிழக அரசை கேட்டுக்கொள்வது உள்ளிட்ட 15 தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. அருந்ததியர்களுக்கான 3% இட ஒதுக்கீட்டினை எதிர்த்து டாக்டர் கிருஷ்ணசாமி வழக்கு தொடர்ந்துள்ள நிலையில், திருமாவளவனும், ஆதித்தமிழர் பேரவையின் அதியமானும் கைகோத்திருப்பது தலித் அரசியல் களத்தில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்துமா என்ற எதிர்பார்ப்பைக் கிளப்பிவிட்டிருக்கிறது! ■

**படங்கள்: பி.கல்யாண்குமார்**